செய்தி வெளியீடு எண்:447 நாள்:14.07.2021

செய்தி வெளியீடு

**சிறப்பு முயற்சிகள் துறை ஆய்வுக் கூட்டத்தில் சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (14.7.2021) தலைமைச் செயலகத்தில், சிறப்பு முயற்சிகள் துறையின்கீழ் இயங்கும் சென்னை மெட்ரோ இரயில் திட்டங்கள் குறித்தும், அதன் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், உலகத் தரத்திற்கு இணையான, பாதுகாப்புடன் விரைவாகப் பயணிக்கக்கூடிய வகையில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தில், இதுவரை பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, சென்னைப் பெருநகர மக்களின் பயன்பாட்டில் உள்ள முதல் கட்டம் மற்றும் அதன் நீட்டிப்புக் குறித்தும், இரண்டாம் கட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்துப் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம், முதல் கட்டத்தின் நீட்டிப்பில் அறிவிக்கப்பட்ட மீனம்பாக்கம் முதல் கிளாம்பாக்கம் வரையிலான வழித்தடம் மற்றும் தாம்பரம் முதல் வேளச்சேரி வரையிலான வழித்தடப் பணிகளை விரைந்து செயல்படுத்திட அறிவுறுத்தினார். மேலும், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II-இன் பணிகள் குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு,இ.ஆ.ப., நிதித்துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச.கிருஷ்ணன்., இ.ஆ.ப., சிறப்பு முயற்சிகள் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. விபு நய்யர், இ.ஆ.ப., சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

............

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9